செ.வெ.எண்: 400/2016 நாள்: 25.06.2016

<u>தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்</u>
<u>(திருநெல்வேலி) லிமிடெட்., நாகர்கோவில் மண்டலம்</u>.

<u>செய்தி குறிப்பு</u>

கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டம், களியக்காவிளை, குலசேகரம், கருங்கல் ஆகிய பகுதிகளில் மினி பேருந்துகள் மற்றும் பயணிகள் வேன்கள் (Maxi-cab) விதிமுறைகளை மீறி, அனுமதிக்கப்படாத தடங்களில் அரசு போக்குவரத்து கழக பஸ்களுக்கு இணையாக பயணிகளை ஏற்றி, இறக்குவதால், அரசு போக்குவரத்துக்கழகத்திற்கு பெரிதும் வருவாய் இழப்பு ஏற்பட்ட சூழ்நிலை இருந்தது. மேலும் இது தொடர்பான புகார்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதின், அடிப்படையில் இதனை கண்காணிக்க உத்திரவிட்டார்கள்.

கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் மற்றும் காவல்துறையினர் மூலம் திடீர் ஆய்வு செய்யப்பட்டு, அனுமதிக்கபடாத தடத்தில் இயங்கி வந்த மினி பஸ்கள் மற்றும் பயணிகள் வேன்களை மார்த்தாண்டம் பஸ் நிலையத்துக்குள் வராமல் தடுத்து நடவடிக்கைகள் மேற்கொண்டனர். கடந்த இரண்டு நாட்களாக (23 மற்றும் 24.06.2016) மேற்காணும் இடங்களில் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டதால் அரசு போக்குவரத்துக்கழகத்திற்கு வருவாய் சுமார் ரூ.7 இலட்சம் அதிகரித்துள்ளது.

மேலும் மார்த்தாண்டம் சந்திப்பு மற்றும் பஸ் நிலையம் போன்ற பகுதிகளில் இருந்த போக்குவரத்து நெருக்கடிகள் முற்றிலுமாக சரி செய்யப்பட்டுள்ளது என தமிழ்நாடு அரசு போக்குவரத்துகழகத்தின் பொதுமேலாளர் திரு.திருவம்பலம்பிள்ளை அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.